Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.57/2024 Date:30.01.2026
Deposition of witness for prosecution: PW1 ( LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | பல்கீஷ் ராசாத்தி | Village | உத்தமபாளையம் |
| Father/ Husband Name | முஜுப்பூர் ரகுமான் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 42/2026 | Calling | கூலி |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 30.01.2026 TIME 01.30 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

கடந்த 16.03.2022-ம் தேதி இரவு 08.45 மணியளவில் நான் வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது, எனது மாமா மீராமைதீன் என்பவர் எனக்கு போன் செய்து முஜுப்பூர் ரகுமானுக்கு கம்பம் சென்றுவிட்டு இருசக்க வாகனத்தில் வரும் வழியில் புதுப்பட்டியில் கார் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், எனது கணவரை உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து இருப்பதாகவும் கூறினார். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது, எனது கணவருக்கு வெளிபுற காயம் எதுவும் இல்லை, அவர் இறந்துயிருந்தார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் மற்றும் அதன் ஓட்டுநர் குறித்து விசாரித்த போது, TN 60 R 5253 கிரே கலர் பொலிரோ வாகனம் என்றும், அதன் ஓட்டுநர் சின்னமனூரைச்சேர்ந்த மணிகண்டன் எனவும் தெரியவந்தது. அதன் பின்னர் உத்தமபாளையம் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான், அதில் உள் கையொப்பம் என்னுடையது தான். புகார் அசா.ஆ.1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சமந்தப்பட்ட எதிரி, வாகனம் ஆகியவற்றின் விபரங்களை போலிசார் சொல்லி தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை விசாரித்து தெரிந்துகொண்டேன். மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயத்தில் நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.57/2024 Date:30.01.2026
Deposition of witness for prosecution: PW2 ( LW2)
Defence:
Court:

| Name | ஜாபித் | Village | உத்தமபாளையம் |
|---|---|---|---|
| Father/ Husband Name | அலாவூதீன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 39/2026 | Calling | டெய்லர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 30.01.2026 TIME 01.40 **PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

கடந்த 16.03.2022–ம் தேதி இரவு 08.45 மணியளவில் நான், ரபீக்கான் ஆகியோரும் கம்பம் – பாளையத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது, எனக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த TN 60 AA 9353 என்ற Hero Maestro இருசக்கர வாகனத்தில் ஒரு நபர் புதுப்பட்டி பேச்சியம்மன் கோவில் அருகே சென்று கொண்டிருந்தார். அப்போது TN 60 R 5253 என்ற பொலிரோ நான்கு சக்கர வாகனத்தை ஆஜர் எதிரி ஓட்டி வந்து, எதிர் திசையில் வந்து மேற்கு புறமாக ஏறி எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த மேற்படி இருசக்கர வாகனம் மீது மோதி, விபத்தை ஏற்படுத்திவிட்டார். இருசக்கர வாகனத்தில் சென்ற நபர் கீழே விழுந்துவிட்டார். நானும், ரபீக்கானும் சென்று அவரை பார்த்த போது, அவர் உத்தபாளையத்தை சேர்ந்த முஜுப்பூர் ரகுமான் என தெரியவந்தது. இடது மோதிர விரலில் காயம் இருந்தது. விபத்தை ஏற்படுத்திய பொலிரோ வாகனத்தில் அதன் ஓட்டுநர் மணிகண்டன் மேற்படி முஜுப்பூர் ரகுமானை உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். நாங்கள் அவருக்கு பின்னால் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவர் முஜுப்பூர் ரகுமானை பரிசோதனை செய்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக கூறினார். முஜுப்பூர் ரகுமானின் உறவினர் மீரான் மைதீனுக்கு தகவல் கூறினோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த இடத்தில் விபத்து நடந்தசமயத்தில் நான் இல்லை என்றாலும், விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல. விபத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் வாகனத்தின் விபரங்கள் போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபர் எனக்கு நண்பர் என்பதாலும், அவரது மனைவி அதிகப்படியான நஷ்டஈடு பெற வேண்டும் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.57/2024 Date:30.01.2026
Deposition of witness for prosecution: PW3 ( LW5)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | மைதீன் | Village | உத்தமபாளையம் |
| Father/ Husband Name | அப்பாஸ்அலி | Taluk | உத்தமபாளையம் |
| Age | 30/2026 | Calling | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 30.01.2026 TIME 01.40 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆகும். 16.03.2022-ம் தேதி இரவு 12.00 மணிக்கு நான் புதுப்பட்டி பேச்சியம்மன் கோவில் அருகே இருந்த போது போலிசார் விபத்து வழக்கு குறித்து அங்கு வந்து விசாரித்து, வரைபடம் வரைந்தார்கள் அதற்கு சாட்சியாக நானும், அப்துல்சலாம் என்பவரும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்தை கேள்விப்பட்டு அந்தஇடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். வழக்கு குற்ற எண், சட்டப்பிரிவு தெரியாது. அசா.ஆ.2 கையொப்பத்தை நான் வெற்று தாளில் செய்தேன் என்றால் சரியல்ல, எழுதப்பட்டுயிருந்தது. நான் ஒரு கையொப்பம் மட்டும் செய்தேன். இரவு 12.00 மணிக்கு மேற்படி இடத்தில் இல்லை என்றாலும், விபத்தில் இறந்த நபர் எனது உறவினர் என்பதாலும் நானும், எனது நண்பரும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.